**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : STC.228/2024 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: | |
| Name | : சத்யராஜ் | | |
| | | Taluk | : |
| Father's/Husband's Name | : திருமலைராஜ் | Age | : 42 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 10.01.2025.**

<u>**முதல் விசாரணை**</u>

நான் இத்தனி நபர் புகாரின் புகார்தாரர் ஆவேன். பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எதிரி 07.10.2017 ம் தேதி என்னிடம் ரூ.6,00,000/-மும், 17.05/2019 ம் தேதி ரூ.3,00,000/-மும், 02.02.2022 ம் தேதி ரூ.2,00,000/- மும் ஆக மொத்தம் ரூ.11,00,000/- கடன் பெற்றுள்ளார். அதற்கு அவர் வட்டியுடன் சேர்த்து ரூ.14,00,000/- கொடுக்க வேண்டும் என்ற நிலையில் புகார்தாரர் எதிரி செலுத்திய ரூ.200000/- போக அசல் தொகை ரூ.900000/- பெற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டு அதன் அடிப்படையில் எதிரி அவர் கணக்கு வைத்துள்ள தஞ்சாவூர் பாரத ஸ்டேட் வங்கி கிளையில் 01/04/2021 தேதியிட்ட ரூ. 9,00,000/-க்கான காசோலையை 25.02.2023 ம் தேதி அளித்தார். (**அந்த காசோலை பு.சா.ஆ.1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.**) அந்த காசோலையை நான் கணக்கு வைத்துள்ள ஆடுதுறை யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் 11/04/2023 அன்று வசூலுக்காக தாக்கல் செய்தேன். ஆனால் எதிரியின் வங்கியால் Account closed என்று காரணம் குறிப்பிட்டு 12/04/2023 ம் தேதி திருப்புதல் குறிப்பாணை மூலமாக திருப்பபட்டது. ( **மேற்படி திருப்புதல் குறிப்பாணை பு.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) காசோலை திருப்பப்பட்ட பிறகு எதிரி பொய்யான தகவலை கூறி 18/04/2023 ம் தேதி எனக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். ( **மேற்படி கடிதம் பு.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) காசோலை திருப்பப்பட்டது குறித்து எதிரிக்கு கடந்த 04/05/2023 அன்று எனது வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினேன். (**அந்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ரசீதுடன் பு.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி அறிவிப்பினை 06/05/2023 அன்று எதிரி பெற்றுக்கொண்டுள்ளார். **(மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை பு.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) **மேற்படி** அறிவிப்புக்கு எதிரி பொய்யான தகவல்களை கூறி 23/05/2023 ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். (**அந்த மேற்படி பதில் அறிவிப்பு பு.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) எனவே எதிரி என்னிடம் கடன் பெற்று தனது வங்கி கணக்கு ஏற்கனவே முடிக்கப்பட்டது தெரிந்தே எனக்கு காசோலை அளித்து ஏமாற்றிய எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் இத்தனி நபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் கண்டித்து, காசோலை தொகையை இழப்பீடாக பெற்றுத்தரும்படி பிராத்திக்கிறேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2025.01.10 17:48:19 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**